பொது சன நூலகம்
8 MAR 2000
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 25 புதன்கிழமை (08 - 03 - 2000) VALAMPURI ஒலி: 80

இனப்பிரச்சினை நிரந்தரத்தீர்விற்கு

## முத்தரப்பினரும் இணைந்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்

### ஜனாதிபதிக்கு ரணில் தனிப்பட்ட கடிதம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் நாளை பேசுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுவார்த்தையில் முத்தரப்பினரும் இணைந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டைக் கடலில் கடற்படை-புலிகள் சமர்

(கொழும்பு)

திருகோணமலை புல்மோட்டைக் கடலுக்கப்பால் விடுதலைப்புலிகளின் இரண்டு படகுத் தொகுதிகள் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு திருகோணமலை புல்மோட்டைக் கடலுக்கப்பால் விடுதலைப்புலிகளின் இரண்டு படகுத் தொகுதிகளை அவதானித்த கடற்படையினர் அவற்றின் மீது தாக்குதல் நடத்தி அவற்றை நிர்மூலம் ஆக்கியதாகவும் இத்தாக்குதலில் 10 விடுதலைப்புலி

(8ஆம் பக்கம் பார்க்க)

● மீன்பிடிக்க அனுமதித்த ஏழு நாட்களில்

# கடற்படையினர் மீனவர்களை நடுக்கடலில் வைத்து தாக்கினர்!

## நேற்றுக் குடாக்கடலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.கடல் நீரேரிப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தமீனவர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகினர்.**

**நேற்றுக்காலை 10 மணியளவில் இத் தாக்குதல்ச் சம்பவம் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**யாழ்.கடல்நீரேரியில் மீன் பிடிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கி கடற்றொழில் செய்த ஏழு நாட்களுள் இந்தத் தாக்குதல்ச் சம்பவம்நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

யாழ். கடல் நீரேரிப்பகுதியில் மீன்பிடிக்கச்சென்ற கடற்றொழிலாளர்களைக் கடற்படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

நேற்றைதினம் காலை 10 மணியளவில் குருநகர்க் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருதந்த சுமார் பத்து மீனவர்களே இவ்வாறு கடற்படையின் தாக்குதலுக்கு ஆளாகினர்.

இத்தாக்குதலின் போது பாசையூரைச் சேர்ந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கஞுத்துறைச் சிறையில் உள்ள கைதி மல்லாகம் நீதிமன்றிற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணேசன் சத்தியேந்திரா என்பவரை ஏப்ரல் 20 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் கே. அரியநாயகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர்களுக்கான நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்த இணக்கம்

### புதிய திகதி பின்பு அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருந்த அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதி கிடைத்ததை அடுத்து இப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் யாழ் மாவட்ட எம், பியுமான டக்ளஸ் தேவானந்தா கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரனவுடனும் மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழுவு

(8ஆம் பக்கம் பார்க்க)

★ பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர்

## வில்லியம்கே ஜனாதிபதியையும் எதிர்க்கட்சி தலைவரையும் சந்திப்பார்

### வெள்ளியன்று வருவார்

(கொழும்பு)

பிரித்தானிய எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் வில்லியம் கேயும் மற்றும் 2 பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை வரவுள்ளார்கள்.

ஐ.தே. கட்சி சார்பாக ஜனநாயக அமைப்புக்களின் அழைப்பை ஏற்றே இவர்கள் வருவதாக தெரிய வருகிறது.

ஐந்து நாள் இலங்கையில் தங்கியிருக்கும் இப் பிரித்தானியக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க

[8ஆம் பக்கம் பார்க்க].

## மீனவர்கள்மீதான தாக்குதல்குறித்து படை அதிகாரிகளுடன் ஜெகன் எம்.பி. தொடர்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர்க் கடற்பரப்பில் கடற்படையினரால் நேற்று மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி,பி யின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளருமான கே.வி. குகேந்திரன் 51, 52 வது படைப் பிரிவின் தளபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கியுள்ளார். இதனையடுத்து தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாக இராணுவப் படைப் பிரிவின் தளபதிகள் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

(ந)

## முப்படைகளினதும் குறைகளை ஆராய உயர்மட்டக்குழு நியமிக்கப்பட்டது

(கொழும்பு)

கடற்படை, தரைப்படை, விமானப்படை ஆகிய முப்படைகளிலும், பொலிஸ் படையிலும் காணப்படுகின்ற குறைபாடுகளை விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு உயர் மட்டக் குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நேற்று நியமித்துள்ளார்.

இக்குழுவில் சுற்றுலா விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா, மகாவலி அபிவிருத்தி அமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய சொலிசிஸ்டர்

(கொழும்பு)

புதிய சொலிசிஸ்டர் ஜெனரலாக சி. ஆர். டி. சில்வா நியமனம் பெற்றுள்ளார்.

சொலிசிஸ்ட ஜெனரலாக இருந்த கமலசபேசன் சட்டமா அதிபராக பதவியேற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

நாளைய 'வலம்புரி'யில்
சித்த மருத்துவம்
மருத்துவக் கட்டுரை
★ அல்சரைக் குணமாக்குவது எப்படி?
★ சளியை ஒழிக்க இயற்கை மருத்துவம்

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# கலாசார அபிவிருத்திப் பணிக்கு

# 40 இலட்சத்து 69 ஆயிரம் ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆண்டு கலாசார மற்றும் சனசமூக அபிவிருத்திக்காக மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து 40 இலட்சத்து 69 ஆயிரத்து 398 ரூபாவைச் செலவு செய்துள்ளதாக 'மாவட்ட செயலக புள்ளிவிபர அறிக்கை தெரிவிக்கிறது.

கலாசார அபிவிருத்திக்காக 11 பிரதேச செயலக பிரிவுகளில் 30 இலட்சத்து 10 ஆயிரத்து 668 ரூபாவும் சனசமூக அபிவிருத்திக்காக 10பிரதேச செயலகப் பிரிவுகளில் 10 இலட்சத்து 50 ஆயிரத்து 730 ரூபாவையும் செலவீட்டுள்ளனர்.

(க-60)

## 30 இலங்கைத் தமிழர் படகுமூலம் இந்தியா சென்றுள்ளனர்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பலர் படகு மூலம் தனுஸ்கோடி கரையை வந்தடைந்திருப்பதாக இந்திய தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

சுமார் 30 பேர் வரையிலான ஆண்கள் பெண்கள் குழந்தைகள் ஆகியோர் இவர்களில் அடங்குவர்.

இலங்கையில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தாம் மன்னாரில் இருந்து பாதுகாப்புத் தேடி வந்திருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(து)

## உதை பந்தாட்டப் போட்டியில் வெற்றி

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெற்று வந்த உதை பந்தாட்டப் போட்டியில் பொற்பதி விளையாட்டுக் கழகம் 1-ஆம் இடத்தையும், திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக் கழகம் 2ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

(செ-22)

## வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் வ. கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீஸ்கந்தராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ-21)

கட்டைவேலி

நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

சர்வதேச மகளிர் தினம்

08- 03- 2000

'பெண்கள் நலம் பேண வாழ்த்துகிறோம்'

மகளிர் குழு

கட். நெல். ப. நோ. கூ. சங்கம்

08- 03- 2000

கரவெட்டி.

(கி-115)

கே.வி.வி. வி. வெற்றிக்கிண்ண

கிரிக்கெட் சுற்றுப் போட்டி - 2000

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தால் வருடா வருடம் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட (30) ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்ப திகதி: 14-03-2000
2. அணி ஒழுங்குத் தெரிவு: 15-03-2000 பிற் பகல் 4 மணி
3. விண்ணப்பக் கட்டணம்: 300/-

குறிப்பு:-

எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும் கழகங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

செயலாளர்

தே. றொபேஷன்

(212)

விஷேட பிரார்த்தனையும்

மகேஸ்வர பூஜையும்

இடம்: நல்லூர் தேரடி அறுபத்து மூன்று நாயன்மார் குரு பூசை மடம்

காலம்: 9 - 03 - 2000 வியாழக்கிழமை

உபயம்: சிற்றம்பலம் தர்மசீலன் கனடா

(அனலைதீவு பிறப்பிடம்)

குறிப்பு:

பிறந்த தினத்தைக் கொண்டாடும் இத்தினத்தில் புண்ணிய ஸ்தலத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் நல்லைக் கந்தனின் பாதக்கமலத்தைவணங்கி முருக, சிவனடியார்களுடன் மான சீகமாக மகேஸ்வர பூஜையில் கலந்து கொள்ளும் நோக்குடன் அடியவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் படி அன்பாக வேண்டுகிறேன்.

உபயகாரர்-

(216)

விவசாய பீடம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

மாணவர்களுக்கான அறிவித்தல்

1. முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு(1999/2000) புதிய அனுமதி.
2. இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு (1998/99)
3. மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு(1997/98)
4. மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (1996/97, 1995/96)

மேற்படி பிரிவினருக்கான விரிவுரைகள் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகின்றேன்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம்.

(கி 116)

## தப்பிஓடிய சிப்பாய் வீட்டிலிருந்து துப்பாக்கி மற்றும் ரவைகள் மீட்பு

(கொழும்பு)

கொலை, கொள்ளைச் சம்பவங்களுக்காக தேடப்பட்டு வந்த, ஸ்ரீலங்காபடையில்இருந்து தப்பியோடிய சிப்பாயின் வீட்டில்இருந்து ரி. 56 ரகத்துப்பாக்கி மற்றும் பெருந்தொகையான ரவைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுபற்றித் தெரிய வருவதாவது, அம்பலாங்கொடயைச் சேர்ந்த ஸ்ரீலங்கா படைச்சிப்பாய் ஒருவரை, 3 கொள்ளைச் சம்பவங்கள் 4 கொலைச்சம்பவங்கள் தொடர்பாக 'சந்தேகத்தின் பேரில் அப்பகுதிப் பொலிஸார் 3 மாத காலமாக தேடி வந்தனர்.

அண்மையில் பொலிஸாருக்குக்கிடைத்த தகவலின் பேரில் சம்பந்தப்பட்டவரின் வீட்டை முற்றுகையிட்டு தேடுதல் நடாத்தியவேளை இவர் தப்பி ஓடிவிட்டார்-

எனினும் வீட்டைச் சோதனையிட்டபோது ரி. 56 ரக துப்பாக்கி அதற்கான பெருமளவு ரவைகள் ஆகியவற்றை கைப்பற்றியதுடன், தந்தையாரான ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி விமல் சேனடிசில்வாவை கைது செய்துள்ளனர்.

இதேசமயம், மேற்படிநபர் யாழ். பலாலி படைமுகாமில் கடமைபுரிந்து வந்தவரெனவும்3 மாதங்களுக்கு முன் விடுமுறையில் வீடுசென்றபின் மீளக் கடமையில் இணையாதவரெனவும் தெரியவருகிறது.

(க-9)

## கோப்பாய் கோட்ட மட்டத்திலான வலைப் பந்தாட்டப் போட்டிகள்

(அச்சுவேலி)

கோப்பாய் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் பின்வருமாறு.

**15 வயதுப் பிரிவு;**

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி.

யாழ். சரவணபவானந்த வித்தியாலயம் எதிர் யாழ். சோமஸ்கந்தாக்கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி எதிர் யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

யாழ்.புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம் எதிர்யாழ். அத்தியார இந்துக்கல்லூரி

யாழ்/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி எதிர்யாழ். அச்சுவேலி ம.வி.

இவ்விளையாட்டுப் போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பி.ப.2 மணிக்கு நடைபெறவுள்ளதாககோப்பாய்ப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் தெரிவித்துள்ளார்.

(செ-57)

## மகளிர் தின நிகழ்வுகள்

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள மகளிர் தினநிகழ்வு இன்று பிற்பகல் 3. 30 மணியளவில் சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மகளிர்குழுத் தலைவி வ. பத்தினிப்பிள்ளை இந்நிகழ்வுகளுக்குத் தலைமைவகிப்பார்.

(க-23)

★ ★ ★

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள மகளிர் தின நிகழ்வு இன்று பிற்பகல் 2. 30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, இராமநாதன் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மங்கையற்கரசி ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர்

(க-21)

★ ★ ★

மகளிர் எழுச்சிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை பருத்தித்துறை தும்பளை மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வுகளை மனித முன்னேற்ற நடுநிலையம் ஒழுங்கு செய்துள்ளது. விவாத அரங்குகள், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளதாகத்தெரிவிக்கப் படுகிறது.

இந்நிகழ்சிகளில் விவசாயக் கழகம், இளைஞர் கழகங்கள் மற்றும் யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த மகளிர் அணியினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் எழுச்சிநாள் நிகழ்வில் மனிதமுன்னேற்ற நடுநிலைய இயக்குநர் சி. ஜெயக்குமார் சிறப்புரையாற்றவுள்ளார்.

(க-3

## மன்னாரில் தேடுதல்

மன்னார் நகரின் சில பகுதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினரால் காலை 5 மணி தொடக்கம் 9 மணிவரை சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

மன்னார் நகரப் பகுதியான மூர் வீதி, சின்னக்கடை, சாவக்கட்டு ஆகிய பகுதிகள் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரால் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது.

சின்னக்கடைப் பகுதி மக்கள் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனராயினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

(—4)

## நல்லை ஆதீன மண்டப விஸ்தரிப்பு

(அரியாலை)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டப விஸ்தரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பாரிய மண்டபமாக அமைக்கப்பட்டு வருகின்றது.

அதே வேளை வழமையாக இங்கு நடாத்தப்பட்டு வந்த யோகாசன வகுப்புக்கள் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை வேளையிலும் சைவசித்தாந்த வகுப்புக்கள் புதன்கிழமைகளில் மாலை வேளையிலும் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விடுதி அமைக்கும் பணி

மந்திகையில் அமைந்துள்ள மாவட்ட மருத்துவ மனையில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கான விடுதி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதற்கான 24இலட்ச ரூபா நிதியினை மாகாண சுகாதார சேவைகள் மகாண பணிமனை ஒதுக்கீடு செய்துள்ளது.

(க-23)

# வன்முறைகள்; அடக்கு முறைகளுக்கு உட்படுத்தப்படும்

# பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுவது அவசியம்!

போர்ப் பண்பாட்டிலிருந்து ஓர் அமைதிப் பண்பாட்டுக்கு மாறவேண்டிய அவசர தேவை இன்றுள்ளது. மனித மேம்பாடு, அமைதி, மக்களாட்சி ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்த, ஒன்றை ஒன்று உறுதிப்படுத்தும் கூறுகள்.

இவையின்றி மனித மேம்பாடு - குறிப்பாக பெண்கள் மேம்பாடு என்பது இன்று கேள்விக் குறியாகவே உள்ளது. உலகெங்கும் போர் நடைபெற்று, ஏன். அமைதி காணப்பட்ட நாடுகளில்கூட பெண்கள் மத்தியில் சொல்லொணா துயரங்களும் துன்பங்களும் தொடர்வதாக அறியப்படுகின்றது.

**பெண்கள் சுமை அதிகரிப்பு**

இராணுவ ஆதிக்கங்களும், அதிகார கெடுபிடிகளும் பெண்கள் சுமைகளை அதிகரித்துள்ளன. அதிகரித்து வரும் வன்முறைப் போக்குகள் பெண்களின் முன்னேற்றத்தின் முக்கிய தடைக்கற்களாக, அவர்கள் உடல், உளநல மேம்பாட்டைத் தாக்குகின்றன.

உலகெங்கும் வன்முறை பற்றி - அமைதிபற்றி, அமைதிப் பேச்சுக்கள் பற்றி, ஆராய்ச்சிகள்,அடுக்கடுக்காக வல்கள், கட்டுரைகள் வெளி இந்த வண்ணம் உள்ளன. வைகள் யாருக்கு உதவப் பாகின்றன.

**மாற்றம் தேவை**

வன்முறைகளுக்கு அதிகம் உள்ளாகும் பெண்களின் பொறுப்பான பங்கு இங்கு எங்கே உள்ளது. வன்முறைகளுக்கு அஞ்சி, ஒதுங்கி ஒழித்து வாழும் பெண்களின், மனப்பாங்கில் தீவிர மாற்றங்கள் தேவை, வன்முறைகள் நடந்த பின்பு போர்க் கொடி தூக்குவதில் மட்டுமே எமது சமுதாயம் கவனம் செலுத்துகின்றது.

இவற்றை வராது தடுத்து, வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பெண்கள் இன்று தயாராகஇல்லை.

எமது பிரச்சினைகளை முன்வைத்து எத்தனை. போராட்டங்கள் எமது மண்ணில் நடந்துள்ளது? நடக்

> **போரின்காரணமாகஉயிரிழந்துபலியானஉயிர்கள், சீர்குலைந்த குடும்பங்கள், மானபங்கப்படுத்தப்பட்ட பெண்கள் அகதி வாழ்வில் அல்லலுறும் பெண்கள், இவர்களின் நிலையை உற்றுநோக்கும் போதுஅமைதியின்ஆழமான உணர்வுகள் எம்மை சூழ்ந்து விடுவது உண்மை.**

கும் வன்முறைகளை எப்படியாவது சமூகத்தின் பார்வையில் எட்டாது மறைத்து, ஒழித்து விடவேண்டும் என்று பாடுபடுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் எமக்கு உரிமைகள் எங்கே?

அல்லற்படும் சமுதாயத்தில் வன்முறைகளைக் கைவிடுவதற்கு சமுதாயம் முழுவதும் ஒரு கடமைப் பொறுப்புடன் செயற்படவேண்டும். இவை அரசாங்க பொறுப்புக்கள் அல்ல; மாறாக நாட்டின் பொறுப்புக்கள் ஆகும். ஓர் போர்ப் பண்பாட்டிலிருந்து ஓர் அமைதிப் பண்பாட்டுக்கு மாறுவது என்பது கடினமான செயல், இதற்கு நாட்டில் ஒவ்வொருவரது ஒத்துழைப்பும் தேவை. பெண்கள் அனுபவித்து வரும் துயரங்கள். வன்முறைகளில் ஆண்களுக்கு பங்கில்லை என்று தட்டிக்கழித்து விடமுடியாது.

ஒரு மாற்றம்தேவையாயின் அம்மாற்றத்தை ஏற்படுத்த ஒவ்வொருவரும் முற்பட வேண்டும். போர் கலாசாரத்திலிருந்து, விடுபட்ட ஓர் மாற்றத்தை ஏற்படுத்தத் தேசிய பாதுகாப்புப் பற்றிய புதிய அணுகுமுறை தேவை மக்களாட்சியை உறுதிப்படுத்த, நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முதலில் இராணுவம் உறுதியளிக்க வேண்டும்.

ஏனென்றால் முழுமையான பாதுகாப்புள்ள, சுதந்திரம் இல்லாத ஓர் அமைப்பு முறையிலிருந்து. முழுமையான சுதந்திரமுள்ள, பாதுகாப்பு இல்லாத ஓர் அமைப்பு முறைக்கு நாம் செல்ல முடியாது. போர், மற்றும் அதனைத் தொடர்ந்த பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பான நிறுவனங்கள்கூட படிப்படியாக அமைதிக்கான, அமைதியை நிலைநாட்டும் நிறுவனங்களாக மாற்றப்பட வேண்டும்.

குழப்பங்கள் பூசல்கள் வருமுன் தடுப்பது சாலச் சிறந்தது இந்தத் தடுப்புத்தான் நமக்கு வெற்றியைஅளிப்பது. இந்த வெற்றியிலேயே மனிதனின் தனித்தன்மையான அறிவுத்திறன்கள் வெளிப்படுகின்றன. அளவுகோலும் அதுவே.

நாம், செய்தி ஊடகங்களில் வாசிக்கும் கேட்கும் நிகழ்வுகள்கூட இன்று ஆரோக்கியமானதாக இல்லை. அமைதி, ஆரோக்கியம், இயல்பு நிலை ஆகியவை செய்திகள் ஆவதில்லை கண்ணுக்குப் புலனாகாத இந்த செய்திகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க முயலவேண்டும்.

**போரைத்தொடரமுடிவு**

இன்று நாட்டின் பொருளாதாரம் மந்த நிலையில் சென்று கொண்டிருந்தாலும் அதிக செலவில் ஆயுதங்களை பெருமளவில் பயன்படுத்தி, போரைத்தொடர்ந்துநடத்துவதற்கு நாடு தயாராக உள்ளது. அணு ஆயுத உற்பத்தி, விற்பனை, இவற்றை எதிர்த்து இன்று பெண்கள் நடத்தும் போராட்டங்கள் முனைப்புப் பெற்றுள்ளன.

சிக்கல்களின் ஆணிவேர்களை கண்டறிவது, தடுப்பது என்பதில் எமது மன உறுதியைக் காட்டவேண்டும்.

**அமைதியில் நாட்டம்**

துயரத்தை எதிர்கொண்டு போரினால் களைப்படைந்த மக்கள் இன்று அமைதியில் நாட்டம் கொண்டுள்ளனர். போரில் ஈடுபட்டுள்ள பகுதியினர்கூட அமைதிவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். உலக நாடுகளில் குறிப்பாக தென் ஆபிரிக்கா, நமீபியா, அங்கோலா, எல்சல்வடோர்,மொசாம்பிக் போன்ற நாடுகளில் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கை எமக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக உள்ள போதிலும், போரின் காரணமாக உயிரிழந்த பலியான உயிர்கள், சீர்குலைந்த குடும்பங்கள், மானபங்கப்படுத்தப்பட்ட பெண்கள், அகதி வாழ்வில் அல்லலுறும் பெண்கள் இவர்களை நினைக்கும்போது, அமைதியின் ஆழமான உணர்வுகள் எம்மை சூழ்ந்து விடுவது உண்மை.

இச் சிந்தனை கட்கு தாம் புத்துயிர் கொடுக்கப் பாடுபட வேண்டியது இன்றைய தேவையாகும். கண்டகம் மட்டும் செய்வது போதாது.

இன்று பெண்கள் அமைப்புக்கள் விழிப்புடன் செயல்படுவதற்கான நேரம் வந்து விட்டது.

**செயற்பாடு அவசியம்**

பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாகும் பெண்கள், சிறுமிகள் எண்ணிக்கைகளை தெரிந்து கொண்டால் மட்டும் போதாது, பட்டினியால் வாடும் குடும்பங்களுக்காக நம் மனம் கொதித்தால் மட்டும் போதாது நாம் ஒவ்வொருவரும் தாம் இயன்ற அளவிற்கு செயற்பட வேண்டும். அரசு செய்வதைப் பார்த்துக் கொண்டு விமர்சித்தால் மட்டும் போதாது.

நாம் நமக்குச் சொந்தமான சுயத்தை விட்டுக் கொடுக்க வேண்டும்.

சமூகம் பெண்களுக்கான மேம்பாட்டு முன் மாதிரிகளையும், வாழ்க்கை முன் மாதிரிகளையும் திணிப்பதை நிறுத்த வேண்டும்.

இத் திணிப்புக்கள் வாழ்விற்கான உரிமைகளை தூக்கி எறிந்து விடுகின்றன. உலகமயமாதல் மூலம் நாடுகளின் தனித்துவம் பேணப்படுவதில் ஏற்படக் கூடிய ஓர் சீர்மையாக்க அபாயத்தை தவிர்த்துக் கொள்வதில் பல யுத்திகளை நாடுகள் பொற முயல்கின்றன.

இதற்காகசமய,பண்பாட்டு தேசிய கொள்கைகளிடம் அடைக்கலம் தேட முனைகின்றன. இதனால் ஏற்படும் உட்பூசல்களை எதிர்நோக்கும் நாம் மாறி வரும் சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு செயற் படுவதில் ஆர்வம் காட்டுவது தேவையாகின்றது.

மனித உரிமைகளை இப் புதிய நூற்றாண்டின் விடியலில் நாம் நடை முறையில் செயற்படுத்த வேண்டிய சூழ்நிலையை வலுப்படுத்துவதற்கு ஆவன செய்ய முயல வேண்டும்.

மனித உரிமைகள் பெண்கள் உரிமைகளுக்கு எந்த நிறுவனமும் தனி மனிதனும் தனி உரிமை கொண்டாட முடியாது. இது பற்றிய மற்றவர்களின் தகுதிகளை நிர்ணயிக்கவும் முடியாது மனித உரிமைகளை கொடுக்கவும் முடியாது. அவற்றை அரும்பாடு பட்டு பெற வேண்டும் நாள் தோறும் புதுப்பிக்க வேண்டும். இச் செயற்பாடுகளின் புதிய அணுகுமுறையில் பெண்கள் அமைதியான வாழ்வும் உறுதிப் படுத்தப் படுகின்றது. அமைதி உணர்வு ஓர் நாளில் வந்து விடுவதல்ல அதனை ஆணை மூலம் திணிக்கவும் முடியாது சிந்தனை சுதந்திரம், செயல், கபட மின்மை போன்ற உறுதிப்பாடுகள் வலுப்படுத்துவனவாக அமையும். வன் முறைப் போக்கின் இழி நிலையிலிருந்து விடுபடும் நிலைக்கு வழிகாட்டியாக போரின் கொடூரத்தை போக்கும் அமைதி நிலையை அடைய பெண்கள் இத் தினத்தில் உறுதியுடன் செயற்பட முனைவது அவசிய தேவையாகும்.

**சரோஜா சிவசந்திரன்**

---



## தவக்கால சிந்தனை

### முதலாம் நாள்

''இதோ அந்த ஏற்புடைய காலம் இதுவே, இதோ அந்த மீட்பின் நாள் இதுவே'' (2 கொரி. 6:2) இன்று அகில உலகத் திருச்சபையானது யூபிலியாண்டின் தவக்காலத்தை ஆரம்பித்துள்ளது. யூபிலி எம்மை மனமாற்றம் நிறைந்த மகிழ்வாழ்வுக்கு அழைத்து நிற்கின்றது. ஒரு கிறிஸ்தவன் தன்வாழ்வில் கிறிஸ்துவின் உண்மைக் கொள்கையை ஏற்க எப்போது தன் உள்ளத்தில் இடம் கொடுக்கின்றானோ, அன்றுதான் அவனில் முழு மாற்றம் ஏற்படுகின்றது. அதாவது யோவேல் இறைவாக்கினர் கூறுவது போன்று உடைகளை அல்ல, எம் இதயங்களைக் கிழிக்க வேண்டும். எம் உள்ளத்தின் ஆழத்தில் உறைந்துள்ள பாவ நாட்டங்களை அறவே ஒழித்து, மனமாற்றம் அடையத் தகுந்த காலமாகிய இத்தவக்காலத்தில் எம்இதயங்களை வேரோடு பிடுங்கி எம் முன்வைத்துப் பார்க்கின்ற மன உணர்வுக்கு நாம் வரவேண்டும். அப்போது தான் எமது வாழ்வு அருள் ஒளி வீசுகின்ற வாழ்வாகமாற்றம் அடையும். யூபிலியாண்டில் நாம் தேடும் அமைதி, மகிழ்ச்சி. அன்புறவு எம்மில் நிலை பெறவேண்டுமெனில் எமது சுயநலம், ஆணவம், மோகம், பழிவாங்கல், அநீதி, உண்மைக்குப் புறம்பான செயல்கள் போன்றவற்றிலிருந்து எம்மை விடுத்து அன்பு, தியாகம், பகிர்வு, மன்னிப்பு, நீதி. ஒப்புரவு ஆகியவற்றை எம்மில் வாழ்ந்து கிறிஸ்துவின் திருப்பாடுகளுக்கு சான்றுபகர வேண்டும். மேலும் முழுமாற்றம் என்பது தன்னோடும்' பிறரோடும், இறைவனோடும் இடம் பெறும் மூவித ஒப்புரவாகும். ஆதலால் இதற்கு செப, தப, தானதரும, ஒறுத்தல் முயற்சிகள் எமக்கு உறுதுணையாக அமையவேண்டும். எனவே எம் மீட்பராம் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளைத் தியானிக்கும் இப்புனித தவக்காலத்தின் வெளியடையாளமாக சாம்பலை எம் நெற்றிகளில் வரைந்தநாம் தவத்தின் அவசியத்தையும் மேன்மையையும் உணர்ந்து இயேசுவின் திருப்பாடுகளில் பங்கேற்பதன் மூலம் அவரை எம் இதயத்தால் பின் தொடர்ந்து பரம தந்தையின் சித்தத்தை எம் வாழ்வில் நிறைவேற்றி யூபிலியின் அர்த்தத்தை உணர்ந்து வாழ இக்காலத்தைத் தகுதியுடையதாக்குவோம்.

S. M. வுளோறன்ஸ்.

---

## களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சைப் பகுதி இயங்குகிறது

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்தியசாலையின் புனரமைக்கப்பட்ட அறுவைச்சிகிச்சை விடுதி கடந்த 28ம் திகதியுடன் மீண்டும் இயங்குவதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.வசீகரன் தெரிவித்தார்.

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சி.சி.கே.செல்லத்துரையின் முயற்சியினால் இவ்விடுதி புனரமைக்கப்பட்டுள்ளது. இதனை டாக்டர் வசீகரன் தனிப்பட்ட தொழில் நுட்ப அமைப்பு முறையில் புனரமைத்துள்ளார்.

இதேவேளை வைத்திய சாலையின் மேல்மாடி கட்டிடப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கென ரூபாய் 5இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நலன்புரிச்சங்க செயலாளர் எஸ்.பேரின்பநாயகம் தெரிவித்தார்.

(க-60)

---

## வீதி ஒழுங்கு பேணுவீர்

வீதி ஓரத்தால் சென்றுடுவீர்
பாதி வீதி எமக்கும் தந்திடுவீர்
நீதியாக வாழ்வில் நடந்திடுவீர்
சாதியாதீர் தெருவிலே உங்கள் வீரத்தை

கனரக வாகனங்கள் கன(தியாய்) சென்றிடுமே
மனமிருந்தால் தெரு நெருக்கடி தீர்ந்திடுமே!
சன சந்தடி உள்ள தெருவில் மக்கள்
மனப்பயம் இன்றி சென்றிடலாம் நன்றே!

உங்கள் வாகனங்களை ஒதுக்கு புறமாக விட்டிடுவீர்!
உங்கள் தெரு பொதுவுடமை என்பதை ஏற்றுடுவீர்!
உங்கள் மனமும் நன்றே செயற்பட்டால்
உங்கள் தெரு எல்லோர்க்கும் நன்றே பயன்படுமே

முடிந்தவரை நடவுங்கள் கடைத் தெருவில்
முடியும் உங்கள் வாழ்க்கை புதுவழியில்!
தடியும் வேண்டாம் பிற் காலத்தில்!
பிடியும் தண்டமும் வேண்டாம் நீதிமன்றில்!

எங்கள் ஒழுங்கையை நாங்களே பேணுவோம்!
பங்கம் வேண்டாம் இந்தப் பாதையில்!
சங்கம் வளர்த்த தமிழர் நாமல்லவோ!
எங்கும் வீதிஒழுங்கு பேணி வாழ்வது நீதியல்லவோ!

நல்லூர் சி. குமாரலிங்கம்

சம்பள உயர்வுகோரி

# தோட்டத்தொழிலாளர்கள் விரைவில் போராட்டம் நடத்தவுள்ளனர்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிப் போராட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு தயாராகி வருகின்றனர்.

இது குறித்த அறிவிப்பினை மலையகத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

உலகிலேயே மிகச்சொற்பத் தொகை ஊதியம் பெறுவோராகவும் அதிகளவு அடக்குமுறைக்குட்பட்ட சமூகமாகவும் விளங்கும் தோட்டத் தொழிலாளர் முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கு பல தமிழ் அமைப்புக்கள் மறைமுக ஆதரவை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம்,

சம்பள அதிகரிப்புத் தொடர்பான பேச்சுவார்த்தைகள் அரச, மலையகத் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கிடையே இடம்பெற்று வருகின்ற போதிலும் அது தொடர்பான உறுதியான முடிவுகள் இதுவரையில் எடுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

[க-9]

மட்டக்களப்பில்

# மானிய அடிப்படையில் தோணிகள் விரைவில் வழங்க நடவடிக்கை

## அதிகாரி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன் பிடியாளர்களுக்கு மானிய அடிப்படையில் தோணிகள் வழங்கப் படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நீரகவளங்கள் அபிவிருத்தி அதிகாரி எஸ். தவபாலரெட்ணம் தெரிவித்தார்

1982 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதல்தடவையாக 14 நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு இத்தோணிகள் வழங்கப்படவுள்ளன. மீனவ சங்கங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 14 பேருக்கு இத்தோணிகள் வழங்கப்படுமெனஅவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பாரிய குளங்களுள்ள பிரதேசத்தில் வாழும் மீனவர்களுக்கு வழங்கப்படும் ஒரு தோணியின்பெறுமதி 14 ஆயிரத்து 60 ரூபாவாகும் பாதுகாப்புப்படையினரின் அனுமதி கிடைத்தவுடன் உரியவர்களுக்கு தோணிகள் கையளிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

(க-60)

## போட்டிப்பரீட்சை

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் இளைஞர் கழக அங்கத்தவர்களுக்கிடையிலான அறிவுப் புதிர் போட்டிப் பரீட்சை ஒன்று இந்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டிப் பரீட்சை பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் நடாத்தப்பட்டு முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பிரதேச, மாவட்ட மட்டத்தில் தனித் தனியாகப் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக

# புதிய துணைவேந்தர் பெயர் விரைவில் அறிவிக்கப்படும்

யாழ். பல்கலைக்கழகத்திற்கான புதிய துணைவேந்தர் பெயர் விரைவில் அறிவிக்கப் படவுள்ளதாகபல்கலைக்கழக வட்டாரங்களில் தெரிவிக்கப் படுகிறது. கடந்தமாதம் பல்கலைக்கழகப் பேரவையினால் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பேராசிரியர் ஆர். குமாரவடிவேல் டாக்டர். எஸ். சிறிகாந்த் ஆகியோரின் பெயர்களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைத்ததும்.

கடந்தமாதம் நடைபெற்ற துணைவேந்தரைப் தெரிவதற்கான சிபாரிசுத்தேர்தலில் பெரும் பான்மை விருப்புப் புள்ளிகளை பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை பெற்றது தெரிந்ததே இறுதி முடிவு ஜனாதிபதியினால்எடுக்கப்படுவதும்குறிப்பிடத்தக்கதாகும்.

(க-3)

## இந்தியா-சீனா பேச்சு

(பீக்கிங்)

சீனா -இந்தியா நாடுகளுக்கிடையில் பிராந்திய பாதுகாப்பு, அரசியல் பொருளாதார விடயங்கள் மற்றும் அணு ஆயுதஒப்பந்தம் பற்றிய பேச்சுக் கள்நேற்று முன்தினம் பீக்கிங்கில் ஆரம்பமாகின.

இரு நாட்டு உயர்அதிகாரிகளும் இப்பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுகின்றனர்.

(க-து)

## செய்திக் குவியல்

★ பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையேயானபோக்கு வரத்தை நிறுத்தும் படி சிவசேனா கட்சி அறிவிப்பு.

★ லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் 150 பேருடன் தரையிறங்கிய விமானம் காருடன் மோதியுள்ளது.

★ எம்.கே.தியாகராஜ பாகவதரின் 91வது பிறந்த தினம் நேற்று சென்னையில் கொண்டாடப்பட்டது. இதில் குன்னகுடி வைத்தியநாதன் போன்றோர் கலந்து கொண்டனர்.

★ 35 வருடங்களாக ஆண் வாரிசு இல்லாமல் தவிக்கும் ஜப்பானிய அரசுக்கு விரைவில் ஆண் வாரிசு கிடைக்கலாம் என டாக்டர்கள் கூறியுள்ளார்கள்,

★ பதிநான்குவயதிற்குட்பட்ட 25கோடி சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று மனித உரிமைகள் ஸ்தாபன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ இந்தியாவுடன் ஆயுதப் போட்டியில் பாகிஸ்தான் இறங்கப்போவதில்லை என்று இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்லேஸ்முஸாரப் தெரிவித்துள்ளார்.

★ இமாலயப் பிரதேசத்தில் கொட்டிய பனியால் 300 மீற்றர் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

★ தாய்வான் சுதந்திரம் பெறும் முயற்சியில் ஈடுபட்டால் சீனா சும்மா பார்த்துக் கொண்டிருக்கமாட்டாது சீனப்பிரதமர் கூறினார். [து[

# பாகிஸ்தானில் பாரிய விபத்து 52 பேர் துடிதுடித்துப் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 52 பொது மக்கள் பலியாகினர். 25 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர்.

திருமண நிகழ்வுக்குப் பேருந்து ஒன்றில் அளவுக்கதிகமாக மக்களை ஏற்றிச் சென்ற வாகனமே விபத்துக்குள்ளானதாய் தெரிய வருகிறது.

கராச்சி நகருக்கு மேற்கே 600 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கால்வாய் ஒன்றில் வீழ்ந்ததினாலேயே அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் உள்ளூர் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற போதும் அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாய் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்துள்ளன. (க-9)

## அரசியலில் ஈடுபட முடியாது

(புவனர்ஸ்அயர்ஸ்)

சிலிநாட்டில் தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள அந்நாட்டுசர்வாதிகாரி ஜெனரல் அருஸ்ரேபினிசே ஒருபோதும் அரசியலிலே ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார் என தற்போதைய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி சர்வாதிகாரியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதையடுத்து பல ஆண்டுகள் பிரித்தானியாவில் சிறையில் நீண்டகாலம் கழிந்தபின்னர் தற்போது சிலிநாட்டிற்கு நாடு கடத்தப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே.

(க-வ)

# இந்தியாவில் 40 இலட்சம் பேருக்கு எயிட்ஸ் நோய் பரவும் ஆபத்து

(சென்னை)

இந்தியாவில் 40 இலட்சம் பேருக்கு எயிட்ஸ் நோய் வரலாம் என்று பிரபல டாக்டர் சி. எம். தேவநாயகம் அவர்கள் சென்னையில் குறிப்பிட்டார்.

குறிப்பாக தமிழ்நாடு கேரளம் தெலுங்கானா போன்ற மாநிலங்களில் காட்டுத்தீ போல் எயிட்ஸ் பரவி வருகிறது.

இதற்கு ஆண்கள் வெளிநாடுகளில் பொருள் தேடச் சென்று தவறான நடைமுறைகளால் எயிட்ஸ் பரப்பும்நோய் காவிகளாக வந்து இந்தியாவில் பரப்புகிறார்கள்.

நவீன நாகரிக மோகமும் பண்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தவறியமையும்தான் எயிட்ஸ் பரவக் காரணம் என்று மருத்துவர் தமது குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (க-து)

# தாய்லாந்தில் இடம்பெற்ற முதலாவது செனட்தேர்தல்

(பாங்கொங்)

தாய்லாந்தில் முதலாவது செனட் சபைக்கான வாக்கெடுப்பு நடைபெற்று முடிந்துள்ளது. 200செனட் ஆசனங்களுக்காக 1521 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர்.

மக்கள் சக்திக்கும்பணபலம் கொண்டஅரசுக்கும்இடையே ஏற்பட்ட தேர்தல் என இத்தேர்தல் குறித்து அரசியல் நோக்குநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம்,

1997 இல் நடைபெற்றசீர்திருத்த அரசியல் அமைப்பின் பின் மக்கள் பெருமளவில் பங்கேற்ற தேர்தல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(க-9)

# தென்லெபனானில் நிலைகொண்ட இஸ்ரேல் படை வாபஸாகும்

## அமைச்சரவையில் தீர்மானம்

(ரெல்அவிவ்)

கடந்த இருபது வருடங்களாக தென்லெபனானை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலிய படைகளை வாபஸ் பெறப் போவதாக இஸ்ரேலிய அரசு தீர்மானித்துள்ளதாக அந்நாட்டு வானொலி நேற்று முன்தினம் தெரிவித்தது.

அவ்வானொலி மேலும் தெரிவிக்கையில்; இது தொடர்பான தீர்மானம் ஒன்று இஸ்ரேலிய அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்கண்ட முடிவில் எத்தகைய மாற்றமும் ஏற்படுத்தப்பட மாட்டாது என அமைச்சரவையில் மேலும் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

அதேவேளையில் இஸ்ரேலிய பிரதமராக கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட எகுவட்பரக் தென்லெபனானில் நிலைகொண்ட இஸ்ரேலிய படை வாபஸ்பெறப்படும் எனக்கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

# மொசாம்பிக்கில் வெள்ள அனர்த்தம் நிவாரணஉதவிகள் குவிகின்றன

(மபுட்டே)

மொசாம்பிக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களினின்றும்பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மேற்குலக நாடுகள் பலவும் முன்வந்துள்ளன.

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மன்போன்ற நாடுகளே வான், கடல்மார்க்க உதவிகளை வழங்க முன்வந்துள்ள நாடுகளாகும்.

இப்போது உதவ முன்வந்த மேற்குலக நாடுகள் முன்கூட்டியே தமது பணிகளை ஆரம்பித்திருக்குமானால், பலர் காப்பாற்றப்பட்டிருக்கலாம் என ஆபிரிக்க நிவாரணப் பணிப்பாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

மொசாம்பிக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் நம்பமுடியாத மிகப்பெரும் துயர் என பாப்பரசர் யோன்போல் கவலை தெரிவித்துள்ளார்.

இதேசமயம்,

மிகவும் இக்கட்டான நிலையில் வான், தரைமார்க்கமாக பேருதவி புரிந்துவந்த தென்னாபிரிக்கா, எரிபொருள் மற்றும் உணவுப்பொருள் பற்றாக்குறை காரணமாக தன, பணியை இடைநிறுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

(க-9)

# வாழ்க்கையில் முன்னேறுவதற்கு உடல் ஊனம் ஒரு தடையல்ல

## காலினால் பரீட்சை எழுதிய மாணவன்

(சென்னை)

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு உடல் ஊனம் ஒரு தடையல்ல என்பதை ஊனமுற்றோர் பலர் பல துறைகளிலும் சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர்.

அந்த வகையில் சென்னை சாந்தோம் மேல்நிலைப் பள்ளியில் உயர் வகுப்புப் படிக்கும் கே. நரசிம்மலு என்ற உடல் ஊனமுற்ற மாணவன் ஒருவன், தான் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ற முன் முயற்சியுடன் தற்போது உயர்தரப் பரீட்சையை காலினால் எழுதி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரது உடலமைப்பைக் கருத்திற் கொண்டு பரீட்சை எழுதுவதற்கு 1 மணி நேரம் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-5)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

## வினா இல. 08

(1) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக?

ஆகாயத்தில் மேகம் உண்டு
அழகான காட்சி தரும்
ஆகா! அந்தி வேளையிலே
அற்புத வர்ணங் காட்டிடுமே

(1) அழகான காட்சி தருவது எது?
(2) அந்திவேளை என்பது எதனைக் குறிக்கும்?
(3) பொருத்தமான ஒத்த கருத்துச் சொல் தருக?
(அ) அற்புதம்:- (ஆ) வர்ணம்:-

(2) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும்பொருத்தமான எதிர்ச்சொல் தருக?
(1) பகை -: (2) புராதனம்-: (3) உயர்வு-:

(3) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பன்மைச் சொல் தருக?
(1) பழம்- (2) நாட்டில்- (3) புடைவை-

(4) பின்வரும் தமிழ்ச்சொற்கள் ஒவ்வொன்றுக்கும் சமமான ஆங்கிலச் சொல்லை எழுதுக?
(1) பன்னிரண்டு- (2) மூக்கு- (3) ஓடுதல்-

(5) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் தொடர்பில் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட ஆங்கிலச் சொல்லின் கீழ் கோடிடுக?
(1) இன்று - (TODAY, TOWDAY, TWODAY)
(2) தேங்காய் - (COCANAT, COCONAT, COCONUT)
(3) வைத்தியசாலை - (HOSPITAL, HOSPITEL, HOSPTAL)

(6) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்க?
(1) அவதியுறுகின்றனர்/ வாழும்/ அதிகளவான/ ஆபிரிக்கநாட்டில்/ மக்கள்/ உணவுத்தட்டுப்பாட்டினால்
(2) மாலை மயங்கி/ சிலபிராணிகளின்/ அதிகரிக்கும்/ இருள் சூழும் போது/ தொழிற்பாடு

(7) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக?
(1) மரக்கறிவகைகளை நறுக்கி நீரில் அமிழ்த்தி அவிப்பதனால் சில போசனைக் கூறுகள் அழிவுறும்( )
(2) வயல்களிலும் பயிர் நிலங்களிலும் இரவில் இடத்துக்கிடம் தீப்பந்தங்களை ஏற்றி வைப்பதால் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்தலாம். ( )
(3) ஒரு நாட்டின் தேசிய ஐக்கியம் சுதந்திரதின விழா மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. ( )
(4) ஒளி இல்லாதபோது அயலில் உள்ள பொருள்கள் எமக்குத் தென்படுவதில்லை. ( )

(8) (1) பெட்டி ஒன்றின் நிறை 7Kg 250g. ஆகும் அவ்வாறான 6 பெட்டிகளின் மொத்த நிறையைக் காண்க?
(2) கேசவன் ஒரு வியாபாரியிடமிருந்து $1\frac{1}{2}$Kg இஞ்சிக்கிழங்கையும் இன்னொரு வியாபாரியிடமிருந்து $3\frac{1}{4}$Kg இஞ்சிக்கிழங்கையும் மற்றொரு வியாபாரியிடமிருந்து $1\frac{1}{4}$Kg இஞ்சிக்கிழங்கையும் வாங்கினான். இவற்றை ஒவ்வொன்றும் சமநிறையுடைய மூன்று பொதிகளாகக் கட்டினான் எனின் பொதி ஒன்றின் நிறையைக் காண்க?

(9) வாணிக்கு ஒரு சட்டை தைப்பதற்கு $\frac{1}{2}$M துணி தேவை. ஒரு சட்டை தைப்பதற்கான செலவு ரூபா 25ஆகவும், 1M துணியின் விலை ரூபா 64 ஆகவும் இருப்பின் வாணிக்கு.
(1) 4 சட்டைகள் தைப்பதற்குத் தேவையான துணியின் அளவைக் காண்க?
(2) 4 சட்டைகள் தைப்பதற்குத் தேவையான துணிக்குரிய செலவைக் காண்க?
(3) 4 சட்டைகள் தைத்து முடிக்க ஏற்படும் மொத்தச் செலவைக் காண்க?

(10) இன்று வெள்ளிக்கிழமை நாளை மறுதினம் 7ஆம் திகதி கடந்த புதன்கிழமை தபீத்தா தனது பிறந்த நாள் நேற்று என தனது நண்பி அபிராமிக்குக்கூறினார். தபீத்தா பிறந்த திகதியைக் காண்க?

(11) ஜெனோசியாவின் வீடு மயூராவின் வீட்டுக்குக் கிழக்கே அமைந்துள்ளது. பல்லவியின் வீடு ஜெனோசியாவின் வீட்டிற்குத் தென்மேற்குத் திசையில் அமைந்திருப்பதுடன் மதுராவின் வீட்டுக்கு தெற்கே அமைந்துள்ளது. ஜெனோசியாவின் வீடு பல்லவியின் வீட்டுக்கு எத்திசையில் அமைந்துள்ளது.

(12) (1) ஒட்டுச் சித்திரத்தினை உருவாக்குவதற்குத் தேவையான பொருள்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
அ- ஆ- இ-
(2) கோலங்களை அச்சிடுவதற்கு நீர் வகுப்பறையில் பயன்படுத்திய பொருள்கள் மூன்றினைக் குறுப்பிடுக?
அ- ஆ- இ-
(3) வகுப்பறையில் தையல் தொழில்பாட்டிற்கு நீர் பயன்படுத்திய பொருள்கள் மூன்று தருக?
அ- ஆ- இ-

(13) (1)ஜெயான் கண்ணாடிக்குவளையில் சிறிதளவு பனிக்கட்டித் துண்டுகளை இட்டு குவளையினை நன்கு மூடிவிட்டு சிறிது நேரத்தின் பின்னர் குவளையின் வெளிப்பக்கத்தில் நீர்த்துளிகள் படிந்திருப்பதை அவதானித்தான் இச்செயற்பாட்டின் மூலம் அவன் பெறும் முடிவு வளிமண்டலத்தில் நீராவி உண்டு என்பதாகும். (சரி/ பிழை)
(2) ஆரம்ப விஞ்ஞான பாடத்தின் போது நீர் அமைத்த எளிய மின்சுற்றொன்றில் காணப்படும் பகுதிகளைக் குறிப்பிடுக?

(14) அடுத்துவரும் எண்களைக் குறிப்பிடுக?
(1) 62,- 54, 46, ............ ... ........
(2) 465, 475, 490, ............ ............
(3) நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை ஒலிம்பிக்விழா நடைபெற்று வருகின்றது. 1996 ஆம் ஆண்டு 26 ஆவது ஒலிம்பிக்விழா நடைபெற்றது. 30 ஆவது ஒலிம்பிக்விழா எந்த ஆண்டில் நடைபெறும்?

(15) றெக்சன், அருண், யூலியன் ஆகியோர் வைத்திருக்கும் மாபிள்களின் விபரம் தரப்பட்டுள்ளது அருணிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை 48. றெக்சனிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை அருணிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கையின் 1/3 மடங்காகும் யூலியனிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை றெக்சனிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கையின் 4 மடங்கிலும் 2 கூடுதலாக உள்ளது.
(1) குறைந்த எண்ணிக்கையான மாபிள்களை வைத்திருப்பவர் யார்?
(2) மூவரிடமும் உள்ள மாபிள்களின் மொத்த எண்ணிக்கை யாது?

-ஆக்கம் வை. சசிகுமார்

குறிப்பு:-
இதற்கான விடைகளை 13-03-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை வினா இல. 07

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின்பெயர் விபரம்

(01) த. தக்சனா, யாழ். கொக்குவில் இந்து ஆ.பா.
(02) சி. சம்பூரணி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
(03) வ. ரம்மியா, சென். ஜோண் பொஸ்கோ.
(04) இ. தரங்கினி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(05) செ. தர்ஷிகா, யாழ். திக்கம் சித்திவிநாயகர் வித்.
(06) சு. அபிராமி, கிளி/பளைமத்திய கல்லூரி.
(07) லோ. அர்ஷிகா, யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
(08) செ. நிரோஸ்வர்மன், யாழ். பரியோவான் கல்லூரி.
(09) சி. கோபிநாத், சிந்மயபாரதி வித்தியாலயம்.
(10) கு. அனித்தியா, யாழ். இந்துமகளிர் ஆ.பா.
(11) வி. கலினா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(12) சி. கிரிஷாந், யாழ். கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்.
(13) த. கஸ்தூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(14) கா. லக்ஷனா, யாழ். கரணவாய் மணியக்காரன் தோ.த.வி
(15) யோ. கம்ஷன், யாழ். பரியோவான் கல்லூரி.
(16) இ. கஜிபன், யாழ். கைதடி கலைவாணி வித்.
(17) ஆ. சந்தியா, யாழ். கைதடி கலைவாணி வித்.
(18) கு. நிறோஜன், யாழ். கைதடி கலைவாணி வித்.
(19) கோ. ருசந்தா, யாழ். நாவற்குழி மகா வித்.
(20) து. திவாகரசர்மா, யாழ். நவாலி அட்டகிரி சைவ
(21) சி. சுஜியந்தன், ஸ்ரீ பார்வதி வித்.
(22) சி. கஸ்தூரி, யாழ். அமிர்தாம்பிகை வித்.
(23) இ. பானுஜா, யாழ். கைதடி கலைவாணி வித்.
(24) ச. ஷாமளை, யாழ். இந்துமகளிர் ஆ.ப.
(25) க. கல்சியா, யாழ். கலைவாணி வித்.
(26) இ. அர்ச்சயா, யாழ். அ.மி.த.க. பாடசாலை.
(27) சு. ரதீபா, யாழ். ஏழாலை புனித இசிதோர் றோ. க.த.
(28) கு. கோபிகா, யாழ். இந்து மகளிர் ஆ.பா.
(29) ம. சுபாஜினி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(30) த. நிவர்சன், மட்டுவில் சரஸ்வதி வித்.
(31) செ. பார்கவி, யாழ். சரஸ்வதி கனிஷ்ட வித்.
(32) வி. மதனராஜன், யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி,
(33) சி. சிவறஞ்சினி, யாழ். தா.இ.த.க. பாடசாலை.
(34) ஞா. மோனிஷா, யாழ். இந்துமகளிர் ஆ.பா.
(35) பா. சாரங்கன், யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்.
(36) நி. குஜிந்தன், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்.
(37) து. றாம்ஜீத், யாழ். சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
(38) வி. வின்ஜக்ஷன் யாழ். சென். ஜோண் பொஸ்கோ.
(39) யோ. தர்ஷிக்கா, யாழ். இந்துமகளிர் ஆ.பா.
(40) நி. ஹரிலோஜனன், யாழ். சென். ஜோண் பொஸ்கோ.
(41) க. ராம், யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி.
(42) சி. நிசாந்தன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(43) ம. ஜெனனி, யாழ். உயரப்புலம் குணபாலன் வித்.
(44) ச. ஆதவன், யாழ். இ.த.க. பாடசாலை.
(45) கு. ஜீவிதா, யாழ். பண்டத்தரிப்பு ம.உ.க.
(46) பா. மயூரிகா, யாழ். கோ.தெ.றோ.க.த.க. பாடசாலை.
(47) கி. ராஜ்கண்ணா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விப்பகுதி வினா இல. 08

"வலம்புரி"
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

---

மாணவர் முழுப்பெயர்; ........ ..........................................
சொந்த முகவரி: ..................................................
கற்கும் பாடசாலை: ............... ...............................
மாணவர் கையொப்பம்: ..........................................

---

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## (இராசி பலன்)

08.03.2000
புதன்கிழமை
(தமிழுக்கு மாசி - 25)

துதியை காலை 11.00 வரை, உத்தரட்டாதி காலை 8.04 வரை, பின் ரேவதி, சித்தயோகம் இராகுகாலம் நண்பகல் 12.53 முதல் 2.24 வரை, சுபநேரம் மாலை 5.22 முதல் 6.53 வரை.

**மேடம்:**
தேவையற்ற தொல்லை, ஞாபகமறதி, கடன்சுமை.

**இடபம்:**
குழம்பித்தெளிதல், அயலவர் ஆதரவு, புதியதிட்டம்.

**மிதுனம்:**
தாயார் அறிவுரை, மனமகிழ்ச்சி, தொழில்லாபம்.

**கடகம்:**
தொழில்வருவாய், காரிய சிறப்பு, வைத்தியசெலவு.

**சிங்கம்:**
முயற்சிதடை, மாமியார் வெறுப்பு, மனப்போராட்டம்

**கன்னி:**
கயவர்சினம், அதிகாரிகள் பயம், சகோதரர் கவலை.

**துலாம்:**
இனியகாட்சி, பணப்புழக்கம், மழலைகள் பாசம்.

**விருச்சிகம்:**
மனச்சிக்கல், வேண்டாத உறவு, பயமிகுதி.

**தனுசு:**
எதிர்பாராதசெய்தி, பயணநன்மை, பெண்சபலம்.

**மகரம்:**
தெய்வதரிசனம், நண்பர் ஆதரவு, கல்வியால்பெருமை.

**கும்பம்:**
பயனற்றபிரயாசம், குருவேதனை, தொழில்கஸ்டம்,

**மீனம்:**
ஏமாற்றம், வசதிகுன்றல், கடிதத்தொல்லை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## புலமைப் பரீட்சை வினா இல 07 விடைகள்

(01) திடீரென ஏற்பட்ட வயிற்றுவலி.
(02) சீருடையை அழுத்தி ஆயத்தப்படுத்தலில் ஏற்பட்ட தாமதம்.
(03) தங்கையுடன் ஏற்பட்டமுரண்பாடு.
(04) ஒளிராப் பொருள்.
(05) இலை, குழை, சருகு. குப்பை, மாட்டுச் சாணம் ஆகியவற்றை மண்ணுள் புதைத்தல்
(06) தவளை.
(07) அட்டை
(08) மஞ்சள்
(09) மேற்கூறிய மூன்றும்
(10) இணைமொழி
(11) உடனுக்குடன்
(12) மாலை 4 மணி
(13) முத்திரை
(14) 0:1
(15) 75
(16) ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.
(17) உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
(18) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
(19) வாரம்
(20) அன்பு
(21) புதன்
(22) வாழைப்பழம்
(23) வண்ணத்துப் பூச்சி
(24) துவிச்சக்கர வண்டி
(25) புதன்கிழமை
(26) கடல் கொண்டு போகும்
(27) பயம் ஒன்று காணும்
(28) உன்னைப்பாடசாலைக்கு
(29) போலஏனங்குநின்றாய்
(30) கண்ணீரை ஏன்சிந்துகிறாய்

# மறைவாழ்வின் ஒன்றான விபூதிபுதன் மனமாற்றத்தின் தொடக்கமுமாகும்

அருட்திரு லெசிங்டன் அ. ம. தி.

இன்று உலகெங்குமுள்ள கத்தோலிக்கர்கள் ''விபூதி புதன்'' அனுசரிக்கின்றனர். அவர்களது மறை சார்ந்த வாழ்வின் வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றாக ''விபூதிப் புதன்'' எனும் இந்நாளை கடைப்பிடிக்கின்றனர். வருடத்தில் சராசரி ஐம்பத்து இரண்டு (52) புதன்கிழமைகள் இருந்தும். இன்றைய புதன் கத்தோலிக்கர்களுக்கு ஓர் முக்கியமான நாளாகும்.

இன்றைய தினத்தை அவர்கள் ஆலயங்களுக்குச் சென்று திருப்பலியில் பங்கு பற்றி நெற்றியில் விபூதி (சாம்பல்) பூசி உபவாசம், உண்ணா நோன்பு இருந்து அனுசரிக்கின்றனர். இந்நாளானது இவர்களது மறை வாழ்வின் வருடாந்த (காலங்களில்) பருவங்களில் (SEASONS) ஒன்றானதினதும், மனமாற்ற காலத்தினதும் தொடக்க நாளாகவும் இருக்கின்றது.

இவ்விஷேச மனமாற்ற காலமென்பதனால் நாம் விளங்கிக் கொள்வதென்ன என்பதை சற்று விளக்கமாக பார்ப்போம். கத்தோலிக்கர்கள் தம் மறைவாழ்வில் ஒரு வருடத்தை மூன்று (3) பெரும் பகுதிகளாக பிரித்திருக்கிறார்கள். பொதுக் காலம், ஆகமன காலம், தபசு காலம் என பிரிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் இவை சில உபபிரிவுகளையும் அந்தந்த காலங்களுள் கொண்டிருக்கின்றன. இக்காலங்கள் மீட்பின் நிகழ்வுகள் வழிபாட்டு சிந்தனைகள், மையக் கருத்துக்கள், நோக்குங்களை மையமாகக் கொண்டு பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வகையிலே தபக் காலம் என்பது இறை இரக்கத்தினை அதிகமாக நினைவு கூரும் காலமாகும். பொதுவாக தபக் காலம் என்றால் தபம், செபம், ஒறுத்தல், உபவாசம், நோன்பு என்பன செய்யும் காலமாகவும், இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்ப்பு என்பவற்றை அடிக்கடி நினைவு கூர்ந்து மிக நெருக்கமாக தியானித்து சிந்திக்கும் காலமுமாகும். இக்காலத்தில் சிறப்பான ஒரு வாழ்க்கை முறையில் எம் வாழ்வை இட்டுச் செல்ல அதாவது இறைவனுக்கும் இறை மக்களுக்கும்ஏற்புடைய விதத்திலே எம் வாழ்வை கொண்டு செல்ல அழைப்பு விடப்படுகிறது. இன்னும் சிறப்பாக எம் இவ்வுலக வாழ்வின் நிலையற்ற தன்மையை மண்ணால் ஆனது மண்ணுக்கே திரும்ப வேண்டுமென நினைவு கூரும் காலமாகும். இதனால் தான் இக்காலத்தை ஆரம்பிக்கும்வெளி அடையாளமாகிய விபூதி (சாம்பல் நெற்றியில் பூசும் போது ''மனிதா நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்'' எனச் சொல்லப்படுகிறது.

அடுத்ததாக ஆண்டவன் இயேசுவின்பாடுகள், மரணம் உயிர்ப்பு எனும் (பாஸ்கா மறை பொருள், மாபெரும் நிகழ்வை நாம் சிரமேற்கொண்டு இக்காலத்தின் போது சிந்திப்பது சாலப் பொருத்தமாகும். இம்மறை நிகழ்வு ஏன், எதற்காக, யாரால், எப்படி நடந்தேறியது? இதன் பலா பலன்கள் என்ன? இதனது பயன்பாடுகள் சரியாக மனுக்குலத்தினால் உள்வாங்கப்படுகிறதா? என்பவற்றில் எம் சிந்தனைகளை தட்டியெழுப்புவது மிக அவசியமானதாகும்.

எல்லாக் காலத்திற்கும் இது பொருந்தக் கூடியதாயினும் இத்தபசுகாலத்தில் சிறப்பாக ஆண்டவன் இயேசு ஒருவராலே குறிப்பாக அவரது இச் செயலினாலே எமக்கு மீட்பு கிடைத்தது. என உய்த்துணர அழைக்கப்படுகின்றோம். இவ் யூபிலி ஆண்டுக்குரிய சிந்தனை கருக்களாக ''நற்கருணை நம் வாழ்வின் மையம்'' இயேசு கிறிஸ்து ஒருவரே எமது மீட்பர்'' எமக்கு தரப்பட்டிருக்கும் இப்பதங்களின் மீது எம் சிந்தனை எழுப்புகின்றபோது இவைகளும் இம்மறை நிகழ்விலே முழுமைப்படுத்தப்பட்டு எமக்கு பயன் நல்கி நிற்பதை உணரமுடியும். இத்தகைய மறை நிகழ்வுகளை நிறைவேற்றுவதில் (பாடுகள், மரணம்) இயேசுவின் வேதனை தாழ்ச்சி, துயர் நிறைந்த உணர்வுகள் எம்மையும் இறை இரக்கத்தை அனுபவிப்பதில் அதன் பயனை முழுமையாக அடைவதில், இப்படியான தியாகம், வேதனை, தாழ்ச்சி என்பவற்றில் எம்மை இழக்க இக் காலத்தில் அழைப்பு விடப்படுகிறது அதேவேளையில் இம்மறை நிகழ்வுகள் (உயிர்ப்பு - விண்ணேற்றம்) இயேசுவின் வெற்றி, பயன்பாடு, மகிமைப்படுத்தல் எமக்கு எம்வாழ்வின் மட்டில் ஓர் பிடிப்பை, நம்பிக்கையை அர்த்தத்தை - இத்தகைய வேதனைகள். துன்பங்கள், இழப்புக்கள் ஊடாக ஓர் மீட்புக்கு, வாழ்விற்கு இட்டுச் செல்லும் - பரகதியில் என்றோ ஒரு நாள் கிடைக்குமென்ற ஆழமான உணர்வூட்டம் எம்மில் உருவாக, வளர்த்தெடுக்க துணை செய்கின்றது.

இதைத் தான் இன்றைய வாசகங்கள் எமக்கு கூறிநிற்கின்றன. இறைவனது பொறுமையும், அன்பும், அரவணைப்பும் நாம் எம் தவறுகளுக்காக அழுது புலம்பி முழு உள்ளத்தோடு அவரிடம் செல்லும் போது நிறைவாக கிடைக்குமென யோவேல் இறைவாக்கினர் ஊடாக அழைப்பு விடுக்கப்படுகிறது. (யோவேல் 2;-18) வெறும் மனிதப் பார்வைக்காக, விளம்பரத்திற்காக, புகழ்ச்சிக்காக, எம் செபத்தை, நன்மைத்தனங்களை செய்யாமல் மாறாக எம் கண்ணுக்கு புலப்படாமலே எம்மை எப்போதும் பராமரிக்கும் இறைவன் நாம் மறைவாக செய்வதை காணும் பொருட்டு அவருக்காகவே அனைத்தையும் செய்ய நற்செய்தி (மத்தேயு 6;1-18) எமக்கு அழைப்பு விடுக்கிறது.

இறுதியாக இன்றைய இவ் வாசகங்களின் பின்னணியிலும், தபக்காலமானது இறை இரக்கத்திற்கான உணர்வின் காலம் என்பதன் பின்னணியிலும் எமது சமகால நடைறை வாழ்வை நோக்குவோமாயில் பாடுகள் (துன்பம், துன்புறுதல், சித்திரவதை) மரணம் எம்நாட்டில் சமூகத்தில் மலிந்துகாணப்படுகின்ற ஒன்று. தபம், ஒறுத்தல், உபவாசம் எனும் பாதங்கள் தமக்குரிய தூய கருத்துக்களை உள்ளடக்கி நின்றாலும் எம் சமூகத்தில், நாட்டில் அச் செயல்கள் (பசி, பட்டினி, வறுமை, மனித வாழ்விற்குரிய அடிப்படை வசதியீனங்கள்) கட்டாயத்தின் பேரால் கடைப்பிடிக்கப்படுகின்றன. இச் செயல்களை நாம் ஏற்றுக்கொள்ளும் மன நிலைகளும், அணுகும் விதங்களும், சகித்துக்கொள்ளும் முறைகளும் இறை சார்புடையதாக திறம் தீட்டப்பட வேண்டும். சிறப்பாக இக்காலத்தில் எம் சமூகத்தில் மலிந்து கிடக்கும் பாடுகள், மாணங்கள் (கிறிஸ்துவினுடையதற்கு சமமான தல்லவாயினும்) கிறிஸ்தவ கண்ணோட்டத்துடன் புதிய அனர்த்தத்தை இறை தேடலை எம்முன் மேற்கொள்ள எம்மை தூண்டி எழுப்ப வேண்டும். இன்னும் சிறப்பாக (கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு) இப் பாஸ்கா மறை பொருளின் வெளிப்பாடாக அவரது பிரசன்னத்தை, அன்பை உணர்த்தி நிற்கும் நற்கருணை இக்காலத்தில் -யூபிலி ஆண்டுக்குரிய இத்தபக்காலத்தில் எம் வாழ்வின்மையமாக திகழ முயற்சி எடுப்போம்.

## சுகததாஸ விளையாட்டரங்கில் தமிழ் ஊடகவியலாளர் கருத்தரங்கு

(வவுனியா)

தமிழ் ஊடகவியலாளர்களுக்கான 2 நாள் கருத்தரங்கு எதிர் வரும் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கு ஹோட்டலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெருமளவு ஊடகவியலாளர்கள் கலந்து கொள்ளும் இந்தக் கருத்தரங்கானது பிறேட்றிக் ஈபர்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம் பெறவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தலைவர் சி.குருநாதன் தலைமையில் நடைபெறும் 4 வது கருத்தரங்கு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மலையகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்களும் இக் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (வ-4)

## மாட்டு வண்டியில் சென்றபோது மாகாணசபை உறுப்பினர் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

வடமேல் மாகாணசபை உறுப்பினர் அனுரகோபல லாவ சபையின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மாட்டு வண்டியில் சென்ற போது இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டார்.

இது தொடர்பாக மாகாணசபைத் தலைவர் ரி. எம். சந்திரதிலகவுக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து, மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரை இது பற்றிய விசாரணைகளை நடாத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இச்சம்பவத்தினை வடமேல் மாகாண முதல்அமைச்சர் எஸ். வி. நாவின்னை கண்டித்திருப்பதாகவும், தாக்குதல் நடத்தியவர்கள் வந்த வாகன பதிவு இலக்கத்தை வடமேல் மாகாண எதிர்க்கட்சி தலைவர் வடிவமங்கா சபையில் சமர்ப்பித்து இருப்பதாகவும் தெரிய வருகிறது. (க-9)

## ஆங்கிலமும் கணனியும் இன்றைய விஞ்ஞான உலகின் இரு கண்கள்

### -உதவிப் பதிவாளர் தெரிவிப்பு

(நெல்லியடி)

ஆங்கிலமும் கணனியும் இன்றைய உலகின் இருகண்கள் எனவே வளர்ச்சியடைந்து வரும் விஞ்ஞான உலகில் மாணவ சமுதாயமாகிய நீங்களும் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்குவது போன்று ஆங்கிலம், கணனி ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும்.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழகஉதவிப்பதிவாளர் இரா. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் தொடர்ந்து பழைய முறைகளை நாடாது புதிய புதிய முறைகளையும் பின்பற்ற வேண்டுமெனவும் தெரிவித்தார் (க-18)

## இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆடைகள் பல இந்தியாவில்

இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆடைகள் பெருமளவில் இந்தியாவிற்கு ஏற்றுமதியாகின்றன.

இலங்கை-இந்திய கட்டுப்பாடற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் பயனாக கூடுதான ஆடைகள் ஏற்றுமதியாகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

மும்பாய் போன்ற சிலநகரங்களுக்கு இலங்கையின் ஆடைகள் ஏற்றுமதியாகின்றன.

மேலை நாடுகள் போன்று தெற்காசியநாடுகளுக்கும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆடைகள் ஏற்றுமதியாகின்றனவாம்.

(து)

## தையற்கலையில் சாதனை படைத்து பரபரப்பை ஏற்படுத்திய இலங்கையர்

(கொழும்பு)

ஏழு தொழிலாளர்களின் உதவியுடன் எட்டு மணி நேரத்தில் 53 அடிஆறு அங்குல நீளமான காற்சட்டையை தைத்து உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். கொழும்பைச் சேர்ந்த் இப்றாகிம் என்பவர்.

கின்னஸ் சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதிப்பித்த இவர் மொறட்டுவ பல்கலைக் கழக டிப்ளோமா பட்டதாரியாவார்.

கொழும்பில் தையல் கடை நடத்தி வரும் இவர் இலங்கைக்கு பெருமை சேர்த்தவர்களுள் ஒருவர் என்ற தகுதியை பெறுகிறார். (க-து)

## ஐந்தாம் ஆண்டு புலமைப்...

(48) வி. ஜனனி, யாழ். சித்திவிநாயகர் வித்.
(49) ஆர். மீநிலா, யாழ். சென். ஜோண் பொஸ்கோ.
(50) அ. ஜெற்சோனியா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(51) க. துவாரகன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(52) நா. அனோஜினி, யாழ். இந்து ஆரமபப் பாடசாலை.
(53) சி. சுபாங்கி, யாழ். இந்துமகளிர் ஆ.பா.
(54) சி. தனுஷ்கா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(55) ப. லக்ஷிகா, யாழ். இந்துமகளிர் ஆ.பா.
(56) க. சிவசொரூபன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(57) ஜெ. சகன்யா, யாழ். கைதடி கலைவாணி வித்.
(58) ந. சுஜீவன், யாழ். மாணிக்கவாசகர் வித்.
(59) ஜே. மேரிறதனி, யாழ். கன்னியர்மடம் ம.வி
(60) கு. மதீசன், யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(61) ப. நிரோஷன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(62) சு. செந்தூரன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
(63) உ. தனுஜா. யாழ். இருபாலை சீ.சீ. தமிழ்க்கலவன்.
(64) சு. அபிராமி, கிளி/ பளை மத்திய கல்லூரி.
(65) ஜே.ரதீசன், மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
(66) பு. இரோஷன், மானிப்பாய் விவேகானந்தா வித்.
(67) ஆ. சஞ்ஜியா, யாழ். நாகர்கோவில் ம.வி
(68) சி. சிவகணேசன், யாழ். பரியோவான் கல்லூரி.
(69) க. நிரேஷன், யாழ். அராலி சரஸ்வதி ம.வி.
(70) க. பிரசாந், யாழ் கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
(71) அ. டினேஷ், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(72) சா. ஆன்டிலைலா, யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(73) அ சசிகலா, யாழ் மணியகாரன் தோ.பா.
(74) தி. கஜவரன், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி.
(75) சௌ. ஜெயகாந்தன், யாழ். உயரப்புலம் குணபாலன் வித்.
(76) மோ. மொறின், யாழ். சுண்டுக்குளி மகளிர்கல்லூரி.
(77) இ. ஜெயபாரதி, யாழ். திக்கம் சித்திவிநாயகர் வித்.
(78) க. ராகசொரூபி, புனித ஜோண் பொஸ்கோ.
(79) வே. நித்யா, திக்கம் சித்திவிநாயகர். வித்.
(80) ச. ராதாறமணி, துன்னாலை காசிநாதர் வித்.
(81) ஆ. கீதாஞ்சன், யாழ். தேவரையாளி இந்துக்கல்லூரி.
(82) ந. ஜெயகாந்தன், யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(83) பொ. கேதாரநாதன், விலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை.
(84) சி. சுகதீபன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(85) பா. நிருஜா, சாவ.டிறிபேக் கல்லூரி.
(86) சி. அனுசலா, உயரப்புலம் குணபாலன் வித்.
(87) ஜெ. நிஜுஜா, யாழ். கப்பூது ஏகாம்பர வித்.

தற்காத்துத் தற்
கொண்டாற் பேணித்
தகைசான்ற
சொற்காத்துச் சோர்
விலாள் பெண்.

- குறள்

# வலம்புரி

## பெண்ணியம்

நாகரிகம் வளர்ந்துள்ள இக்காலத்தில் சிந்தனைத் தேறல் துளிவிடும் இந் நாட்களில் பெண்ணியம் பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடியாது. உலகின் மனித உயிரினங்களில் ஐம்பது வீதத்தினராக மிளிர்பவர்கள் அவர்கள். ஆற்றலில் ஆண்களுக்குச் சற்றும் சளைக்காதவர்கள். குடும்ப நிலையில் இருவழியும் செயல் புரிந்து இல்லத்தை ஆள்பவர்கள்.

பெண்களின் தனித்துவத்தைச் சமூகம் பேண வேண்டும். அவர்களது சுதந்திரத்தை மறுக்கவோ மறைக்கவோ கூடாது பாரதியின் சங்க நாதத் திற்குப்பின் மங்கையர்கள் தங்கள் செயற்றிறனைக் காட்டத்தலைப் பட்டுவிட்டார்கள் தான்

பல் வேறுபட்ட செயற்பாடுகளுக்கு மத்தியில் மங்கையர் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகளும் சமூகத்தில் மலிந்துதான் இருக்கிறது மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்றான் கவிமணி தே.வி. ஆனால் அழுக்குப்படிந்த சமூகத்தில் அப்பழுக்கில்லா மங்கையர்கள் படுகின்ற இன்னல்கள் ஏராளம். கொலை நிலைக்கே இட்டுச்செல்லும் பொம்மைகளாக பெண்கள் எண்ணப் படுகிறார்கள்.

குடும்ப நிலையில் சுதந்திர மிழந்த பெண்கள் ஏராளம், உள எழுச்சிக்கேற்ற இயல்புஆற்றலை வெளிக்கொணர வேண்டியவர்கள் இருட்டடிப்புச்செய்யப்படுகிறார்கள். இன்றும் விளித்துக் கொள்ளா சமூக எண்ணங் கொண்ட இனங்கள் பெண்பிறவி யெடுத்தால் பெருமூச்சு விடுகிறார்கள்.

பிறப்புரிமையான சுதந்திரத்தை அனுபவிக்கத் தடுக்கிறார்கள் ஆற்றலை புரிய மறுக்கிறார்கள். வாழ்வியலில் குறுக்கே நிற்கிறார்கள். இந்தநிலை மாற வேண்டும். பெண்ணியம் தழைக்க சமூக சிந்தனை விழிப்பு எழுச்சி கொள்ள வேண்டும். நாட்டிலே பெண்காரியத்தில் மாசு படியாது மலர்ந்திட வகை செய்ய வேண்டும் பெண்ணியம் தளராது உறுதி கொள்வதாக கண்ணிய நிலை பெண்ணியத்தின் பால் வந்து குவிக-

- அன்புடன் ஆசிரியர்

சர்வதேச மகளிர்தினம் இன்றாகும்

# ஆணுடன் இணைந்த வகையில் பெண்ணியம் முன்னெடுக்கப்படுவது காலத்தின் தேவையே!

புத்தாயிரம் ஆண்டு தொடங்கியுள்ள இவ்வேளையில் புதிய கருத்துக்களும் தோன்றியுள்ளன. பழைய கருத்துக்களை முற்றாகப் புறம் தள்ளிவிடாமல் அவற்றைச் செம்மைப்படுத்தும் முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாகப் பெண்களைப் பற்றிய கருத்துக்கள் மீளவும் கருத்தூன்றி ஆராயப்பட்டு வருகின்றன. உலகப் பெண்கள் தினமெனத் திட்டமிடப்பட்ட மார்ச் எட்டாம் நாளில் இந்த ஆய்வுக்கருத்துக்களை எல்லோரும் எண்ணிப்பார்க்கும் மரபும் தோன்றி வலுப் பெற்றுவிட்டது. கடந்த காலங்களில் கழிந்து போன அனுபவங்களால் பெற்ற பட்டறிவு கொண்டு நிகழ்காலத்துக்குரிய செயற்பாடுகளைப் பெண்களே திட்டமிடவேண்டிய வேளை இது எமது வாழ்வுச் சூழலுக்கும் வளத்திற்கும் பொருந்தும் வகையில் அதைச் செய்ய வேண்டும் என்பதும் புத்தாயிரமாண்டின் புதிய இலக்காக உள்ளது.

இன்று பெண்களின் நிறை வாழ்வு என்பதைப் பற்றி எண்ணிச் செயற்பட வேண்டியுள்ளது, மரபானபெண்கள் பற்றிய கருத்துக்களை மனதுள் வாங்கிய மரபானநிலைகளையும் மறக்கவேண்டி நேரலாம். பெண்கள் நிலையைத் தெளிவுபடுத்திச் சமூக நிலையில் அவர்களின்பங்களிப்பை நிலைநாட்ட பல நாட்டுச் சிந்தனையாளர்களும் முயற்சி செய்துவருகின்றனர். எனவே இன்று பெண்களின் நிறைவாழ்வு என்பது என்ன? என்பது பற்றிய விளக்கம் ஒன்றும் வேண்டப்படுகிறது. சமூக அங்கத்தவர் என்றவகையில் பெண்களும் சமமான செயற்பாடுடையவர்கள் என்பதை எல்லோரும் உணர்வதில்லை. எமது முன்னோர் பெண்ணைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டதை நாமறிந்துள்ளோம். அதுபற்றிய தெளிவு இன்னும் எல்லோருக்கும் ஏற்படவில்லை. எமது சமூக அமைப்பை மீள ஒரு முறை எண்ணிப் பார்க்கும் போது எமது வாழ்வுச் சூழலில் பெண்களின் செயற்பாடுகளைக் கண்டு வியந்து அவர்களின் இயற்கையான குணவியல்புகளைப் போற்றி வழிபட்டதை அறிகிறோம். எமது பண்பாட்டுச் சூழலில் பெண்மைக்குரிய சிறப்பான குணங்களும் சொல்லப்பட்டுள்ளன. உலகப் பொது மறையாம் திருக்குறள் பெண்ணை வாழ்க்கைத் துணை நலம் என்று போற்றிக் கூறுகிறது. 'இல்லாள்' என சிறப்பித்துள்ளது. திருகுறள் தோன்றிய காலத்தில் பெண்கள் பற்றிய கருத்து மீளாய்வு செய்யப்பட்டதை இதன் மூலம் அறியலாம். காலத்தின் தேவை கருதி கருத்துக்களை மீண்டும் எண்ணிப்பார்க்கும் போது பெண்களின் நிறைவாழ்வு பற்றிய புதிய விளக்கம் ஒன்றும் தோன்றுகின்றது.

### திருக்குறளில் பெண்கள்

சமூகத்தில் குடும்பம் என்ற அமைப்பில் திருக்குறள் பெண்ணை 'இல்லாள், என வரையறை செய்துள்ளது. இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பு பெண்ணுக்கு வழங்கப்பட்டதை இது காட்டுகிறது. வீடுதவிர்ந்த வெளிப்புறத்தில் பெண் எத்தகைய பங்களிப்பைச் செய்தாள் என்பதைத் திருக்குறள் தெளிவுபடுத்தவில்லை. 'வரைவு இல்மளிர், என ஒரு வகைப் பெண்களின் செயற்பாட்டையும் திருக்குறள் எடுத்துக்காட்டியுள்ளது இங்கு குறிப்பிட வேண்டியது, பெண்ணினுடைய செயற்பாடுகள் ஆணுடன் இணைந்து இருந்தமை பற்றித் திருக்குறள் தெளிவுபடுத்த முயன்றதை இதுகாட்டுகிறது.

எனவே பெண்களின் நிறை வாழ்வு என்பது ஆண்களுடன்இணைந்த நிலையிலே தான் வைத்து எண்ணப்பட்டது. தனிப்பட்டநிலையிலே பெண்ணின். ஆற்றலும் குணவியல்புகளும் அவளுக்கு நிறை வாழ்வு ஒன்றை நல்கமுடியாது என்ற மரபையும் இது தோற்றுவித்தது,

### நிறை வாழ்வு

பெண் என்ற நிலையில் அவளுடை நிறைவாழ்வு என்பது எப்படி அமையமுயும் என்பதை விளக்கவேண்டியது இன்றைய காலத்தின்தேவையாகும். குடும்பம் என்றநிறுவன அமைப்பிலே 'தாய்' என்ற சிறப்பு நிலையிலே பெண் நிறைவாழ்வுபெற்றவள் எனக் கருதப்பட்டது. இக்கருத்து இன்றுவரை நிலவுகின்றது. எதிர்காலத்திலும் இதை மாற்றவேண்டிய தேவை இல்லை, இல்லாள், என்ற நிலையைவிட 'வாழ்க்கைத் துணைவி, என்ற நிலையிலே தான் பெண்ணின் நிறை வாழ்வு பலகாலமாக நிலைத்திருந்தது. இக்கருத்து இன்று மாறிவிட்டது. பெண்ணின் சமூகப்பங்களிப்பு அவளுடைய வாழ்க்கையை நிறைவுபெறச் செய்கிறது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனைவி என்ற நிலையிலே பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளும் செயற்பாடுகளும் இன்று மாறிவிட்டன. கணவனின் நிழலாக நின்று இயங்கிய மனைவியின் கடமைகள் பெருகிவிட்டன. ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே என்ற புறநானூறு பேசும் கடமை நிலையிலிருந்து வளர்ச்சி பெற்றுத் தன் குழந்தைகளின் முழுமையான கல்வியையே திட்டமிட்டு நிறைவேற்றுகின்ற தாயக இன்று பெண் செயற்படுகிறாள். 'தந்தையொடு கல்விபோம், என்ற சொல்லை, பழைய உரையை மாற்றிப் பணி செய்கிறாள். கண்போல் தன்னைக்காக்க வென உறுதிமொழி செய்து உடன்நின்ற கணவன் விட்டுப் பிரிந்த நிலையிலும் வீறாகப் பணிசெய்கிறாள்.

### சமூக மாற்றம்

தன் குழந்தைகளின் வளமான வாழ்க்கைக்காக வீட்டை விட்டு வெளியே சென்று பணிசெய்யத் துணிந்துவிட்டாள். வாழ்க்கைக்கான பொருள் தேடும் ஆணின்பொறுப்பைத்தானே தனியச் சுமக்க முன் வந்து விட்டாள் இந்த மாற்றம் அவளுடைய மரபானதளைகளையெல்லாம் நீக்கி வெளியே வரும் மன உரத்தையும் அவளுக்கு வழங்கியுள்ளது. இதனால் அவளுடைய செயற்பாடுகளில் விட்டு விடுதலையாகி நிற்கும் உணர்வும் தோன்றி விட்டது. கட்டுப்பாடும் ஒழுங்கு முறைகளும் வரையறை செய்யப்படாத நிலையில் வாழ்க்கைப் போக்கும் தடம்புரளத் தொடங்கியுள்ளது. இந்த நிலை சமூக அமைப்பிலே பல சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

பெண்ணுக்குரிய பொருள் வளமும், கல்வி வளமும் அவளுக்கு பொறுப்பாள்கைத் திறத்தை நல்க வேண்டும். ஆனால் இத் திறம் இன்னமும் நிறைவாக வில்லை. எதிர் காலத்தில் இது நிறைவு பெறும். என்ற எதிர்பார்ப்போடு காத்து நிற்பதைவிட இப்போதே திட்டமிட்டுச் செயற்படுவதே சிறந்தது. 'திருமணம்' என்ற இன்றைய வணிக ஒப்பந்த வாழ்க்கை நெறியை அடிப்படையாக வைத்துச் செயற்படாமல் மனிதவளத்தையே அடிப்படையாகக் கொண்டு நிறைவாழ்வு என்ற ஒரு உறுதியான கட்டடத்தைக் கட்டி முடிக்கப்பணி செய்ய வேண்டும்.

உலகப் பெண்கள்தினத்தை ஒவ்வொரு ஆண்டும் நினைவுக்குக் கொணர்ந்து செயற்படுபவர்கள் இத்தகைய இலக்கொன்றை முன்னிறுத்த வேண்டியது அவசியம். வளர்ச்சி பெற்ற நாடுகளின் வளமான வாழ்க்கை நிலையையேஎண்ணிக் கனவு கண்டு கொண்டிருக்காமல் எமது வாழ்வுச் சூழலை நன்கு நோக்கிப் பொருத்தமான செயற்பாடுகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

மனிதவளத்தினால் மனித வாழ்க்கையை நிறைவாக்க எமது பண்பாடு எமக்கு வழிகாட்டியுள்ளது. அன்பு நெறி நின்று அனைவரையும் பேணி நலன் காக்கும் 'தாய்' என்ற பொறுப்பு வாய்ந்த நிறைவான நிலையை அடைவதே பெண்களின் எதிர் கால வாழ்க்கையின் பெறுபேறாக வேண்டும். இந்த இலக்கையடைவதற்காக கல்வியையும் ஞானத்தையும் துணையாகக் கொண்டு பெண்கள் துணிவாகச் செயற்பட்டு விரைவாகப் பயன் பெறவேண்டும். நிமிர்ந்த ஞானச் செருக்குடைய செம்மை மாதர் உருவாக வேண்டும்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
(வருகை ஆய்வாளர் கச்சுயின் பல்கலைக்கழகம்- ஜப்பான்)

தமிழ்-முஸ்லிம் சமூகங்கள்

# ஒற்றுமைப்படாதவரை எம்மத்தியில் எதையுமே சாதித்து விட முடியாது!

## தபால் தொடர்புகள் அமைச்சர்

(மட்டக்களப்பு)

தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் ஒற்றுமைப்படாதவரை எமது மண்ணிலே எதையுமே சாதித்துவிட முடியாது. கடந்த கால ஆட்சிக் காலத்தின் போது தமிழ் பேசும் இரு சமூகங்களையும் பிரித்து வைப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்கான தீர்வை பின்தள்ளியும் அதன் மூலம் தொடர்ச்சியாக ஆட்சியிலிருப்பதையும் ஐ.தே.க. அரசு உறுதிப்பத்டுதிக் கொண்டு வந்தது.

இவ்வாறு தபால் தொலைத் தொடர்புகளின் தொடர்பு சாதன பிரதியமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

16 இல்ட்ச ரூபா செலவில் கட்டப்பட்ட மட்டக்களப்பு மஞ்சத் தொடுவாய் ஆயுள்வேத கட்டிடத்தை திறந்து வைத்த அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்.

அருகருகே வாழுகின்ற சமூகங்கள் ஒற்றுமைப் படாவிடில் அபிவிருத்திக்குப் பதிலாக சுடுகாட்டைத்தான் காணமுடியும் தமிழ் முஸ்லிம் மக்களின்இணைப்புப்பாலமாகவே மஞ்சத்தொடுவாய் வைத்தியசாலையை அமைத்தேன்.

90 களில் நாம் அனுபவித்த கொடூரங்களுக்கெல்லாம் ஐ. தே. க. தான் காரணம்.

மொழியால் ஒன்றுபட்ட இரு சமூகங்களும் சகல வழிகளிலும் ஒன்றுபடுவதன் மூலம் தமது இலக்குகளை விரைவில் அடையலாம் என்றார்.

மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சி. சி. கே. செல்லத்துரை உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (க-60)

## பிராங் புஸ்பநாயகம் காலமானார்

(கொழும்பு)

பிரபல தொலைக்காட்சி நாடக நடிகரும், மேடை நாடகக் கலைஞரும் செய்தியாளருமான பிராங் புஸ்பநாயகம், நேற்றுத்தனது 56 வது வயதில், இருதயக் கோளாறினால்காலமானார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஆங்கிலச் செய்தி ஆசிரியராக பணியாற்றி கடந்த வருடம் இவர் ஓய்வு பெற்றுள்ளார்.

ரூபாவாகினி தொலைக்காட்சி சேவை செய்தித்துறையில் இவர்கடமையாற்றியவர்என்பதும் குறிப்பிடத்க்கது. (க-9)

## வவுனியாவில் ஒருவாரத்தில்
# எட்டுப் பேர் கைது 7பேர் விசாரணை
## ஒருவரைக் காணவில்லை

வவுனியாவில் இம்மாதம் முதல் வாரத்தில் மட்டும் எட்டுப் பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப் பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட எட்டுப் பேரில் ஏழுபேர் மேலதிக விசாரணையின் பொருட்டு வவுனியா இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒருவரைக் காணவில்லையென வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். சிறிதரன் நடத்திய விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பாண்டியன் குளத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் (வயது 33) என்பவரே கடந்த 3ம் திகதி முதல் காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-103)

## தாக்குதல் தொடர்பாக ஆராயக் கூட்டம்

யாழ் கடல் நீரேரிப் பகுதியில் மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று 512 வது பிறிகேட்டில் இன்று காலை 8 - 30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இதில் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 7 படையினரையும் கைது செய்து 14ஆம்திகதி நீதிமன்றில் அஜர் செய்க!
## பொலிஸ் அத்தியட்சகர் பணிப்பு

செம்மணி புதைகுழிப் படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் ஏழு பேரையும் கைது செய்து 14 ஆம் திகதி நீதி மன்றில் ஆஜர் செய்யுமாறு குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவு குழு அதிகாரிக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கல்பதாரு தெரிவித்துள்ளார்,

புதை குழி தொடர்பாக சந்தேகிக்கப்படும் இராணுவ அதிகாரிகள் ஏழு பேரையும் கைது செய்வதில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளது என்றும் இவர்கள் தற்போது பல்வேறு பகுதிகளில கடமையில் உள்ளதால் இவர்களைக் கைது செய்ய சிரமமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவக் கப்டன்களான பெரேரா, லலித்ஹேவகே, லெப்டினன்ட் துடுகல்ல, லெப்டினன்ட் விஜயசிறிவர்த்தனா றிசேவ் பொலிஸ் ஆர்.பி. அப்துல் நஸீர், பொலிஸ் கான்ஸ்டபிள்களான வி. பி.எ.சமரவிக்கிரம, நிஸந்த ரூபசிங்க, ஆகியோரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட வுள்ளவர்களாகும். (வ)

# வன்னிக்கான மருந்துகள் அனுப்பாவிடில் இறப்பு வீதம் வேகமாக அதிகரிக்கும்
## டாக்டர் சிவகுரு அவசரகடிதம்

வன்னியில் ஊசி மற்றும் மருந்துவகைகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக் குறையால் இறப்பு வீதம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிவகுரு பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகப் பிரிகேடியர் தமிதாவிற்கு 'ஒக்ஸ்பாம்' ஊடாக அனுப்பிவைத்துள்ள அவசரக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வன்னிப்பகுதி வைத்தியசாலைகளுக்கு இவ்வாண்டு முதலாம் காலாண்டிற்கான மருந்துவகை, ஊசிவகைகளை அரசு அனுப்பிவைக்காது இழுத்தடித்து வருகிறது இதனால்வன்னிப்பகுதி வைத்தியசாலைகளில் மருந்துக் கையிருப்பின் நிலை மோசமடைகிறது எனவும்இந்நிலை நீடித்தால் இறப்பு வீத அதிகரிப்பினை நிறுத்தமுடியாது என்றும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வங்கிகளில் திரவப்பணத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் உத்தியோகத்தர்கள் ஓய்வூதியர்கள் தமதுசம்பளங்களைப் பணமாகப் பெறமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தபாலகங்களில் முத்திரைகளிற்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அதிபர்..

டனும் பேச்சு நடத்தியதற்கிணங்க இந் நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நேர்முகப் பரீட்சை பற்றிய புதிய திகதி மற்றும் இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும் எனவும் ஈ. பி, டி, பி. யினரால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-வ)

### முத்தரப்பினரும் ..

செயற்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி இக்கடிதத்தில் தெளிவாக எழுதியுள்ளார்.

நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இதைத்தவிர வேறொரு வழியும் இல்லையென்பதையும்இக்கடிதத்தில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முத்தரப்பினரும் இனப் பிரச்சினைத் தீர்வில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டுமென்பதே 9ம் திகதி பேச்சுவார்த்தையில் கருப்பொருளாக அமையுமென ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

### முப்படைகளின்---

ச்சர் மைத்திரிபாலா சிறிசேனா, தொழில் அமைச்சர் ஜோன் செனிவிரத்னா ஆகிய சிரேஷ்ட அமைச்சர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இக் குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அல்லது பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி ஒருவரும், மற்றும் சில உறுப்பினர்களும் இடம் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த உயர்மட்டக் குழு முப் படைகளினதும், பொலிஸ் படைகளினதும் முக்கிய குறைபாடுகளை விரிவாக ஆராய்ந்து இரண்டு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி இக்குழுவினரைப் பணித்துள்ளார். (வ)

### புல்மோட்டை --

உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதே வேளை புல்மோட்டைக் கடலில் நடந்த மோதலில் கடற்படையினரின் ஒரு டோறாப்படகு மூழ்கடிக்கப்பட்டதாக புலிகள் வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளனர். (ச)

### களுத்துறை..

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி கைதாகி அனுராதபுரம் நீதி மன்றத்தால் களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி நபரை மல்லாகம் நீதி மன்றத்திற்கு மாற்றும்படி பெற்றோர் செய்த மனுவையடுத்தே நீதிபதி இவ் உத்தரவை விடுத்துள்ளார். [வ.ச]

### வில்லியம்கே....

குமாரதுங்கவையும் ஐ.தே.க தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து தனித்தனியாகப் பேசவுள்ளனர்.

இவர்கள் நோர்வே வெளிவிவகார அமைச்சரின் சமாதானத்தீர்வு குறித்தும் லியம் பொக்ஸ் ஒப்பந்தம் குறித்தும் பேசவுள்ளனர்.

இதேவேளை வில்லியம் கேக்கினதும் இரு பாராளுமன்ற உறுப்பினர்களதும் இலங்கை விஜயத்திற்கும் தமக்கும் 'எந்தவித தொடர்புகளும் இல்லையென்றும் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதுடன் தனிப்பட்ட அழைப்பின் பேரிலேயே இலங்கை வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் இலங்கை விஜயம் இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதானப் பேச்சுவார்த்தையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தலாம் எனவும் அரசியலவதானிகள் தெரிவித்துள்ளார்கள்.

## இருவரைக் காணவில்லை

மாசிவன் சந்தி நீர்வேலி மேற்கைச் சேர்ந்த கந்தசாமி இந்திரகரன் (வயது19) மற்றும் விபுலானந்தர் வீதி கொழும்புத்துறையைச் சேர்ந்த சண்முகதேவன் அலக்ஸ் சஜீவ் (வயது 18) ஆகிய இருவரும்கடந்த ஐந்தாம் திகதி முதல் காணவில்லை என அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் யாழ். மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் எனவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலேயே இவர்கள் காணாமற் போனதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-3)

## இன்ஸ்பெக்டர் காயம்

திருமலை 3 ஆம் கட்டையடியில் நேற்றுக் காலை 9-30 மணியளவில் சப் — இன்ஸ்பெக்டர் ஒருவர் பிஸ்ரல் குழுவினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

ரம்யஸ்ரீ [வயது 34] என்ற பொலிஸ்காரரே பிஸ்ரல் குழுவின் தாக்குதலுக்கு இலக்காகி திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

### கடற்படையினர்...

இரண்டு மீனவர்கள் மயக்கமுற்றதாகவும் அவ்விருவரையும் ஏனைய மீனவர்கள் கரைக்குக் கொண்டு வந்து சேர்ந்ததாசவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடற்றொழிலாளர்களின் வலைகளையும் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான மீன்களையும் கடற்படையினர் எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் முதல் விதிக்கப்பட்ட மீன்பிடித்தடையினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் நிலை குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அண்மையில் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து உடனடியாக மீன்பிடிக்க அனுமதிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

எனினும் அதனை கடற்படையும் இராணுவமும், உடனடியாக நடைமுறைப் படுத்தவில்லை.

இதனைத்தொடர்ந்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் (வி. கே. ஜெகன்) மேற்கொண்ட பெருமுயற்சியினால் இம்மாதம் முதலாந் திகதி முதல் குறிப்பிட்ட வரையுறைகளுடன் மீன் பிடிப்பதற்கு கடற்படை அனுமதி வழங்கியிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் ஜெகன் மற்றும் கடற் படையின் உயரதிகாரிகள் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் சில வரையறையுடன் மீண்டும் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் அப்பாவிக் கடற்றொழிலாளர்கள் கடற் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

# வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபைக்குப் புதிய தலைவர்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் தலைவராக ஈழமக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த வல்லிபுரம் நடராஜா நேற்று சம்பிரதாய பூர்வமாக பதவி ஏற்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாண பதில் நீதவான் கே. கேசவன்முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதைத் தொடர்ந்து கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேசசபைக்கு சென்று சபையின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட இவர் நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளார்.

ஏற்கனவே இருந்த பிரதேச சபைத் தலைவரான செல்லப்பா சுந்தரமூர்த்தி தேர்தல் ஆணையாளரால் ஏற்கனவே பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

# ஊர்காவல் படைவீரர் ஒருவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதி ஊர்காவல்படை வீரர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் நேற்றுக் காலை 8 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மீராசாகிப் பரீட் (வயது 25) என்பவரே கடமை முடிந்துவீடு திரும்பிக் கொண்டிருந்த போது ஏறாவூர் ஆற்றங்கரையோரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரிடமிருந்து ரி 56 ரகத் துப்பாக்கியும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-60-101)

# முல்லைத்தீவில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் தொடர்ந்து வெட்டு
## 10ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(மாங்குளம்)

முல்லைத்திவு மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோர்களுக்கான நிவாரணத்தைப் பெற்று வந்த குடும்பங்களில் கடந்த இரண்டுமாத கால இடைவெளியில் பத்தாயிரம் குடும்பங்களிற்கான நிவாரணத்தை அரசாங்கம்நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்திவு மாவட்டத்தில் முப்பத்தையாயிரம் குடும்பங்கள் நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களாக இருந்த போதும் சென்ற வருடம் அரசாங்கம் மேற்கொண்ட பாரிய நிவாரண வெட்டினைத் தொடர்ந்து இருபத்திநான்காயிரம் குடும்பங்களுக்கே நிவாரணம் வழங்கப்பட்டு வந்துள்ளது.

மீண்டும் இவ் வருட ஆரம்பத்திலும் மாசி மாதத்திலும் இரண்டு மாத கால இடைவெளிக்குள் பத்தாயிரம் குடும்பங்களிற்கான நிவாரணத்தை அரசு வெட்டியுள்ளதால் தற்போது பதின்நான்காயிரம் குடும்பங்கள் மட்டும் நிவாரணத்தைப் பெற்று வருகின்றன.

இதனால் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிகாரிகள் நிவாரணம் வழங்குவதில் பெரும்நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும், அரசு மேற்கொண்டுள்ள நிவாரண வெட்டினால் இடம் பெயர்ந்த குடும்பங்கள் பெரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-த)

# ஒரு வைத்தியருடன் இயங்கும் மல்லாவி அரசினர் வைத்தியசாலை

(வவுனியா)

மல்லாவி அரசினர் ஆதார வைத்தியசாலை ஒரு வைத்தியருடனும் 4 தாதிகளுடனும் 5 உதவித் தாதிகளுடனும் இயங்கிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

துணுக்காய், மல்லாவி, வவுனிக்குளம், வன்னிவேளாங்குளம், ஆலங்குளம், நெட்டாங்கண்டல் போன்ற பாரிய பிரதேசங்களை உள்ளடக்கிய ஒரே ஒரு ஆதார வைத்தியசாலை இதுவாகும்.

இங்கு சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக செல்கின்றனர். எனினும் இங்கு போதிய வைத்தியர்கள் மற்றும் ஆளணி வசதிகள் இல்லாத காரணத்தினால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். (க-57)

## இளைஞன் மீது தாக்குதல்

வீதியால் சென்றஇளைஞரை இனம் தெரியாத நபர் தடியால் தாக்கிவிட்டு அவரிடம் இருந்து சைக்கிள் மணிக்கூடு, தேசிய-விசேட அடையாள அட்டை ஆகியவற்றை அபகரித்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

இச்சம்பவம் சிறுப்பிட்டி மேற்கில் 6/3/2000 இரவு 8மணியளவில் இடம்பெற்றது அதேஇடத்தை சேர்ந்த 24 வயதுடைய ந. அரங்கேசன் என்பவரே தாக்கப்பட்டு யாழ், போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.